Registered as a News paper | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 07

# தமிழ்அலை

Tamilalai

தினசரி

அலை - 01 | 02-01-2004 வெள்ளிக்கிழமை | ஒலி - 89

அதிநவீன தொழில்நுட்பத்தில்
உங்கள் அச்சுப்பதிப்புக்களை
(கறுப்புவெள்ளை, கலர்)
விரைவாக செய்து கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய
ஒரே இடம்:
நிதி பதிப்பகம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065. 2226110

## திருமலை மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் நல்லுறவை ஏற்படுத்த சிவில் அமைப்புக்கள்

(ஏறாவூர் நிருபர் ஐ.எல்.றூமி)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்- முஸ்லிம் இனங்களுக்கிடையே நல்லுறவினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் சமூக பிரதிநிதிகள் கொண்ட சிவில் அமைப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் சமூக முக்கியஸ்தர்களுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மாவட்ட தலைவர்களுக்கிடையே சம்பூர் புலிகளது அலுவலகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இவ்விடயம் குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது.

கொள்கைத்திட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அலிசாஹிர் மௌலானா புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாஅம்மானுடன் தொடர்பு கொண்டு இச்சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இப்பேச்சுவார்த்தையில்:- திருமலை மாவட்ட மஜ்லிஸு சூமா தலைவர் மௌலவி எம்.எம்.கரீம் வடக்கு கிழக்கு மாகாண சமாதான

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## புத்தாண்டு பிறப்பில் ஒலித்த புலிகளின் குரல் வானொலி

(வவுனியா நிருபர்)

புதுவருடத்தை முன்னிட்டு புலிகளின் குரல் தமிழீழ வானொலி புதன்கிழமை நள்ளிரவு 12 மணி தொடக்கம் வியாழன் இரவு 10.30 மணிவரை சிறப்பு நிகழ்ச்சிகளை வெளிநாடுகளின் தமிழ் வானொலி சேவைகளுடன் இணைந்து வழங் கினர்.

ஐ.பி.சி, ஐரோப்பிய தமிழ் வானொலி, பிரான்ஸ் தமிழ் ஒலி, அவுஸ்திரேலியா இன்பத்தமிழ் வானொலி, கனடா சி.ரி.ஆர் (C.T.R.) தமிழ்சோலை, தமிழ்நாதம் இணையத்தளம் ஆகியவற்றுடன் இணைந்து நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கினர்.

# ஹக்கீம் தனியலகு யோசனை

# சமாதான பேச்சுக்களை முறிக்கும்!

## தமிழ் புத்தி ஜீவிகள் கவலை தெரிவிப்பு

(நமது நிருபர்)

**சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்குக்கான தனி முஸ்லிம் அலகுக் கோரிக்கையை முன்வைத்து தான் எதிர் காலத்தில் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் சிக்கல் நிலையை உருவாக்குமென தமிழ் புத்தி ஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணி வசமிருந்த மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்துவிட்டது.

மீண்டும் போர் மூளுமா? சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படுமா? என்னும் ஒரு பதற்றமான சூழ்நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வதும், வடக்கு கிழக்குமாகாண முஸ்லிம்களுக்கான இடைக்கால தனியலகு வரைபை தயாரிப்பதிலும் ஈடுபட்டு வருகிறார். இவ்வரைபு தயாரிக்கப்பட்டதும் அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறான தனியலகு கோரிக்கை விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களில் முட்டுக்கட்டையை ஏற்படுத்துவதுடன் தமிழ் முஸ்லிம்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அம்பாறை மாவட்டத்தில் 75 ஆயிரம் ஏக்கர் நெற் செய்கை பாதிப்பு!

(ஏறாவூர் நிருபர் ஐ.எல்.றூமி)

அம்பாறை மாவட்டத்தில் உரிய காலத்தில் பருவமழை கிடைக்காததினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொத்துவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, இறக்காமம் ஆகிய பிரதேசங்களில் இம்முறை சுமார் எழுபத்தைந்தாயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை வரட்சியினால் கருகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வரட்சியின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காக குளங்களிலிருந்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துமாறு விவசாயிகள் நீர்பாசனத் திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சார்க் மாநாட்டின் வெளியுறவு செயலர் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பம்

(நமது நிருபர்)

2வது சார்க் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை திட்டமிடும் சார்க் மாநாடு 4ம் திகதி முதல் 6ம் திகதி வரை இடம்பெற இருக்கிறது. சார்க் கமைப்பு நாடுகளின் தொழில்நுட்பக் குழுவினர் ஒத்துழைப்பு மேம்பாடு குறித்தும் நேற்று ஆரம்பமாகிய வெளியுறவுச் செயலாளர்கள் கூட்டத் தொடரில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத்தொழில் நுட்பக் குழுவினர் நாடுகளுக்கிடையிலான பல்வேறு துறைகளில் பகிஸ்கரிப்பு செலுத்து வருகிறார்கள். விவசாயம்,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கிராம உத்தியோகத்தர் சங்க வருடாந்த ஒன்று கூடல்

(எம்.யுவராஜ்)

மண்முனை வடக்கு கிராம உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தின் 5வது ஆண்டு வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 04ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் பா.ஶ்ரீஸ்கந்த ஜெயா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி கலந்து கொள்ளவுள்ளதோடு, அதி சிறப்புத்தரத்தில் கிராமசேவை உத்தியோகத்தர்களாக பதவியுயர்வு பெற்று

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அக்கரைப்பற்று செலிங்கோ அலுவலகத்தை இடமாற்ற முயற்சி

(உதயகுமார்)

அக்கரைப்பற்றில் இயங்கும் செலிங்கோ காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகத்தை கல்முனைக்கு இடமாற்றுவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டு வருவது குறித்து செலிங்கோ காப்புறுதியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்முனைக்கு இவ் அலுவலகம் இடமாற்றப்பட்டால் சுமார் 2000க்கு மேற்பட்ட காப்புறுதியாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி வரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஆங்கில ஆசிரியர்கள் மொழியறிவை விருத்தி செய்ய நடவடிக்கை

(ஏறாவூர் நிருபர் ஐ:எல்.றூமி)

நாட்டிலுள் அரசாங்க பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களது மொழியறிவைவிருத்தி செய்வதற்கு திட்டமொன்று அடுத்த ஆண்டு முதல் அமுல் செய்யப்படவுள்ளது.

உலக வங்கி இதற்கான நிதியுதவியை வழங்கவுள்ளதாக கல்வி கலாசார மனிதவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.கே. நாணயக்கார அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரியில்லாத பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பத்து மாதங்கள் கொண்ட பயிற்சி வார இறுதி நாட்களில் வழங்கப்படும் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகளுக்கென வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் பத்து நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பெரும்பாலான பயிற்சி நிலையங்கள் பல்கலைக் கழகங்களின் கட்டடத் தொகுதிகளிலேயே இயங்கும்.

## போடியார் பொறி வெடி

முஸ்லிம் காங்கிரசை கரையாண்கள் அரிப்பதை அனுமதிக்க முடியாது

பேரியல் அஷ்ரப் எம்.பி.



கறையாணுக்கு மருந்து வாங்கத்தான் ரவூப்ஹக்கீம் இந்தியாவுக்கு போயிருக்காரு.

## தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரைகள் 5ல் ஆரம்பம்

(எஸ்.ரவீந்திரன்)

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியின் புதியபாடநெறிக்கான விரிவுரைகள் எதிர்வரும் 5ம் திகதி ஆரமபமாகவுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.குணரெட்ணம் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

தமிழ் அலை
Tamilalai
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065. 2226110
தொலைநகல:- 065. 2226110
மின்னஞ்சல்:- tamilalai32@yahoo.com:
இணையத்தளம்:- www.tamilalai.net

02.01.2004

## பலமான அழுத்தம் வேண்டும்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகாரப் பிணக்குகள் முடிவுக்கு வந்து சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும். என்ற ஒரு கண்டிப்பான உத்தரவை அமெரிக்கா விடுத்திருப்பது வரவேற்புக்குரியது.

கடந்த 2003ம் ஆண்டில் ஏற்பட்ட இந்த அரசியல் அதிகார இழுபறி புதிய ஆண்டில் தொடரக்கூடாது. சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் அதீத அக்கறை காட்டி வரும். சர்வதேச சமூகம் தற்போது சிறிலங்கா தலைமைகளின் சுயரூபங்களை மிகத் தெளி வாகத் தெரிந்திருக்கும் என்பதில் சந்தேக மில்லை தற்போது அமெரிக்கா விடுத்திருக்கும் உத்தரவை சிறி லங்கா அரசோ அல்லது நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியோ சாதாரண அன்புக்கட்டளையாக புறந்தள்ளி விட முடியாது.

சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான வாசற் கதவைத் திறந்து விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

இப்போது அமெரிக்கா கூறியிருப்பதைத் தான் ஏனைய நாடுகளும் கூறப்போகின்றன, வலியுறுத்தப் போகின்றன.

சமாதானம் என உதட்டளவில் கூறிக் கொண்டு உள்ளத்தில் போர் திட்டத்திற்கான வழி முறைகள், ஆயுதக் கொள்வனவு, படைப்பலம் திரட்டல் போன்ற நடவடிக்கைகளில் அரசு அதிக நாட்டம் காட்டுவதாக இருந்தால் சமாதானம் என்பது எட்டாக் கனியாகி விடும்.

இத்தகைய ஒரு சூழ் நிலையில் சமாதானத்தை அரசு இன்னும் இழுத்தடிப்புச் செய்வது பொருத்தமான செயலல்ல .

எனவே பேரினவாதக் கட்சிகள் ஓரணி திரண்டு சமாதானம் ஏற்படுவதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் சூழ் நிலையில் சமாதானத்தை வரவேற்கும் அல்லது விரும்பும் சக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து அதனை ஏற்படுத்த அரசுக்கும் ஜனாதிபதிக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# சிங்களத் தலைமைகளின் கொடூரச் சுவடுகள்

கலகம் பிறந்தால் வழி பிறக்கும்" என்ற சான்றோரின் வாக்கிற்கு இணங்க ஈழத்தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தங்களுடைய இழந்த உரிமையை பேச்சுக்கள் மூலம் அடைய முடியாது. என்பதை உணர்ந்த மக்கள் அகிம்சை வழியிலான போராட்டங்களை நடாத்தினார்கள். இதன் மூலம் எதிர்பார்த்த விளைவு கிடைக்காததை உணர்ந்த தமிழர் ஆயுத முனையிலே தான் போராட வேண்டும்.என நினைத்தது பல களங்களைக் கண்டது அதிலே பல வீரர்களை இழந்தனர். இராணுவ ரீதியில் வெற்றியடைந்து வந்த தமிழர் படையை வெற்றியடைய முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு சிங்கள அரசாங்கம் தள்ளப்பட்டது. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக செலவிட வேண்டிய பணம் இலங்கை அரசாங்கத்தால் போருக்காகச் செலவிட்டதை தொடர்ந்து இலங்கை பொருளாதாரம் ஆழக்குழி தோண்டிப் புதைக்கப்பட்டது. இதனால் இலங்கை உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் பார்வைக்கு இலங்கையின் இனப்பிரச்சினை தென்பட்டது. ''ஆப்பிழுக்கப் போன குரங்கைப் போல்" சிறிலங்கா அரசாங்கம் சர்வதேசத்தின் கவனத்தில் சிக்கித் தவிர்த்தது. இச்சந்தர்ப்பத்தில் தான் சிங்களத் தலைவர்கள் ''பயங்கரவாதத்தை ஒழிப்போம்" என்ற போர்வையில் உலக நாடுகளிடம் கையேந்தியது இதற்கு லக்ஸ்மன் கதிர்காமரை ஒரு பகடக்காயாகப் பயன்படுத்தியது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் தமிழ் இளைஞர்களை கைது செய்தும் சிறையில் அடைத்தும் கொடுரங்கள் செய்யப்பட்டும் வந்தனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டு வந்தனர். நாட்டை விட்டும் வீட்டை விட்டும் புலம் பெயர்ந்தனர். தமிழர் பகுதிகள் சிங்களவர்களினால் அபகரிக்கப்பட்டன. குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன இவ்வாறாக மூன்றாம் கட்ட ஈழப் போர் நடந்தது. புலிகளின் இராணுவ ரீதியிலான பெருக்கத்தையும் யுத்தத்தின் தந்திரோபாயங்களையும் கண்டு சிறி லங்கா அரசும் உலக நாடுகளும் கதி கலங்கின. இச்சந்தர்ப்பத்திலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தேர்தலின் மூலம் மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றிக் கொள்ளும் பொருட்டு விடுதலைப்புலிகளுடன் ஒரு போர் நிறுத்த உடன்பாட்டினைக் கொண்டு வந்தது இதன்படி போர் ஓய்வு பெற்று நாட்டில் இயல்பு நிலை ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகியும் இன்னும் இயல்பு



நிலை ஏற்பட வில்லை என்றே குறிப் பிடலாம். இருந்தாலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி அரசுக்கும் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் முதலாவது பேச்சுக்களை முதல் ஆரம்ப நிகழ்வுகள் நடந்தேறின அதனைத் தொடர்ந்து 6 சுற்றுப் பேச்சுக்கள் கட்டம் கட்டமாக நோர்வே நாட்டின் அனுசரணையுடன் நடந்தேறின. இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது அரசினால் முன்வைக்கப்பட் புலிகளின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலும் புலிகளின் வாக்குறு திகள் இழுத்தடிக்கப்பட்டும் வந்ததனால் புலிகள் தரப்பு தற்காலிகமாக பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியிருந்தது. ஜப்பானில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் புலிகள் பங்கேற்கவில்லை. இதற்கும் முக்கிய காரணம் பேச்சு வார்த்தைகளின் போது பேசப்பட்ட விடய ங்கள் பல நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டமையே ஆகும்.

இது ஒரு புறமிருக்க சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் ஆளும் கட்சியாக இருந்து கொண்டு எதிர்க் கட்சியினரான ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை குறை கூறியும் விமர்சித்தும் வந்துள்ளது. நோர்வே நாட்டின் தூதுவராக இருந்த எரிக்சொல்கெய்ம் புலிகளிடம் நாட்டைக் கூறு போடும் முயற்சியில் இறங்கியுள்ளார் என்ற பொய்ப் பிரச்சாரத்தின் பேரில் சிங்கள மக்களை பூச்சாண்டி காட்டியும் இனவாதக் கட்சிகளைத் தூண்டி விட்டும் வேடிக்கை பார்க்கத் தொடங்கினார். ரணில் அரசிடம் ரகசிய பகிரங்க எதிர்ப்புக் கடிதங்களையும் அம்மையார் அனுப்பினார். இத்தனைக்கும் மேலாக ரணில் விக்கிரமசிங்க அரசும் விடுதலைப்புலிகளும் ஒரு இணக்கப்பாட்டிற்குள் வந்து புலிகளினால் ஒரு இடைக்கால நகல் திட்டம் ஒன்றும் ரணில் அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்திலும் இந்நாட்டு ஜனாதிபதி சந்திரிகா தனது சுயரூபத்தைக் காட்டியுள்ளார். அதாவது உள்துறை அமைச்சு, மக்கள் தொடர்பாடல் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு போன்ற

**அரசையூர் ஏ. கருணா**

வற்றை தம் கைவசம் எடுத்துக் கொண்டதை அடுத்து தென்னிலங்கை பெரும் அரசியல் நெருக்கடியைச் சந்தித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை இனப்பிரச்சினையை உன்னிப்பாக எதிர்நோக்கிக் கொண்டிருந்த உலக நாடுகள் சந்திரிகா அரசாங்கத்தின் உண்மையான நிலை என்ன என்பதையும் உணர்ந்தன.

மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து விட்டோம் இன்னுமொரு தேர்தல் நடந்தால் நாம் பதவியில்இருந்து தூக்கியெறியப்பட்டுவிடுவோம் என்பதை உணர்ந்த சந்திரிகா தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சுக்களைப் பொறுப்பேற்றது. சமாதான முயற்சிக்கு எதிரான செயற்பாடுஎன்றே அரசியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இதனால் இவ்வரசாங்கத்தின் முகத்திரை கிழித்தெறியப்பட்டு ஆட்டம் கண்டுள்ளமை அரசியல் வரலாற்றின் அடிப்படையில் கால நீரோட்டத்தில் அறிந்து கொள்ளலாம். இதே வேளைஇராணுவ ரீதியில் வளர்ச்சி கண்டுள்ள விடுதலைப் புலிகளை இன்று அரசியல் ரீதியாக காய் நகர்த்தல்களில் அறிவும் திறனும் உண்டு என்பதை உலக நாடுகள் மெச்சிக்கொண்டு தான் இருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் எடுத்த முயற்சிகள் சில நிறைவேற்றப்பட்டும் பல நிறைவேற்றப்படாமலும் இருக்கும் இன்னிலையில்இந்நாட்டு மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

# இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை
## சமாதானத்துக்கான சாவு மணியா?

இந்தியாவுடன் இலங்கை மேற்கொள்ளவிருக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையானது கொழும்பிலுள்ள, குறிப்பாக மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களிலும், சர்வதேச அமைப்புக்களின் அலுவலகங்களிலும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. புதுடில்லியுடன் அதீத ஆர்வத்துடன் கொழும்பு செய்து கொள்ளவிருக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையானது சமாதான நடவடிக்கைகளுக்கு அடிக்கப்படும் சாவு மணியா? என்ற கேள்விக் கணைகள் இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து எழுப்பப்பட்டுள்ளன.

கொழும்பில் இயங்கும் சர்வதேச அமைப்புக்கள் பல இலங்கையின் தற்போதய நிலைவரம் தொடர்பாக ஆய்வறிக்கையைத்தமது சொந்த நாடுகளுக்கு அனுப்பி வருவதாகவும் அறிய வருகிறது.

பாதுகாப்பு, உள்துறை, வெகுஜன தொடர்பாடல் அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த நவம்பர் 4ல் பொறுப்பேற்ற பின்னர், பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் பாரிய கேள்விகளை ஏற்படுத்துவதாகத் தோன்றுகிறது என்று அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு சம்மந்தமாக பல விடயங்கள் பாரிய ச்ர்ச்சை ஏற்பட இடமளிப்பதாக அமைவதுடன் சர்வதேசத்திற்குத் தவறான சமிக்சையை ஏற்படுத்துவதாக அமையுமென அந்த ஆய்வாளர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டார். தனது விஜயத்தின் போது இந்தியாவின் உயர் மட்டத்துடன் தான் நடாத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இராணுவத் தளபதி ஊடகங்களுக்கு விபரமாகத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவிருக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை, இந்தியா இலங்கை இராணுவத்திற்கிடையில் தொடர்பாடலை ஏற்படுத்துல், படையினரின் போக்குவரத்துஇந்திய விமானப்படை ஹெலிக்கொப்டர்களை வாடகைக்கு அமர்த்துதல், பலாலி விமானத்தள ஓடுபாதையைத் திருத்துதல், இரு நாடுகளுக்கிடையிலான புலனாய்வுப் பரிமாற்றங்கள், இந்து சமுத்திரத்தில் இந்தியக் கடற்படை, கரையோரக் காவல் படை, இலங்கை கடற் படையினர் கூட்டாக ரோந்தில் ஈடுபடுத்தல், இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சிகளை அதிகரித்தல், இலங்கையில் உயிரிழந்த 1555 இந்திய சமாதானப் படையினருக்கு கொழும்பில் நினைவுத் தூபி அமைத்தல்" போன்ற பல விடயங்களைப் புதுடில்லியில் உயர் மட்டத்துடன் ஆராய்ந்ததாக இராணுவத் தளபதி பலகல்ல கூறியிருந்தார்.

ஆனால் பொருத்தமான நேரத்தில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளனவா? என்ற கேள்வி அரசியல் ஆய்வாளர்கள் மத்தியிலிருந்து எழுந்திருக்கின்றன. பாதுகாப்புத் துறையில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்புகள் வெளியாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சு அல்லது ஜனாதிபதி செயலகத்திலிருந்து இந்த அறிவிப்புக்கள்வெளியாகியிருக்க வேண்டும். இந்தத் தரப்புகளே இராணுவத் தளபதியின் விஜயம் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்புகளை வெளியிட்டிருக்க வேண்டும். அல்லது வெளிவிவகார அமைச்சின் பங்களிப்பும் இதனுடன் தொடர்புபட்டதொன்றாகும்.

ஆனால், பொருத்தமான நேரத்தில் இந்த விபரங்கள் தொடர்பாக ஐ.தே.மு அரசாங்கமோ அல்லது பிரதான எதிர்க் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியோ கரிசனை காட்டியதாகத் தென்படவில்லையென அரசியல் ஆய்வாளரொருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# களுவாஞ்சிகுடியில் புது வருட ஆராதனைக்கு சென்ற மக்களுக்குப் படையினர் அனுமதி மறுப்பு

(எஸ்.ரவீந்திரன்)

களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படை வீதித்தடைக்கும் ரெலிக்கொம் முன்னாலுள்ள பொலிஸ் வீதித் தடைக்கும் இடையில் அமைந்துள்ள. களுவாஞ்சிகுடி மெதடிஸ்த ஆலயத்தில் நேற்று நள்ளிரவு இடம் பெற்ற ஆராதனையில் கலந்து கொள்ள வந்த பக்தர்களை விசேட அதிரடிப் படையினர் வீதித் தடையை மூடி வைத்திருந்ததால் அனுமதி மறுக்கப்பட்டது.ஆராதனையில் கலந்து கொள்ள வந்த மக்கள் பட்டிருப்பால் சுற்றிவளைத்து பொலிஸ் வீதித் தடையூடாக பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதாக மெதடிஸ்த ஆலய நிர்வாகம் தெரிவிக்கின்றது. அத்துடன் வாகனங்கள் எதுவும் உள்ளே கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. புதுவருடத்திலே முதலாவது நாளே இந்நிலையா என ஆராதனையில் கலந்து கொள்ள வந்த பொது மக்கள் தெரிவிக்கின்றனர். தாங்கள் வீதியை திறக்கும்படி விசேட அதிரடிப்படையினரிடம் கோரிய போதும் அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிய வருகின்றது.

# மட்.மேலதிக அரச அதிபராக எம்.பத்மநாதன் நியமனம்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபராக நேற்று முதலாந் திகதியிலிருந்து இலங்கை நிர்வாக சபையைச் சேர்ந்த எம். பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு மாவட்ட வறுமை நிவாரண உதவி ஆணையாளராகக் கடமை புரிந்தவர். மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றி வந்த எஸ்.புண்ணியமூர்த்தி கரையோர அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

# சட்ட விரோத மின் பாவனையை தவிர்க்குமாறு புலிகள் அறிவுறுத்தல்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு படுவான் கரைப் பிரதேசமான குறிஞ்சா முனை, கன்னன்குடா போன்ற இடங்களில் சில பொது மக்கள் சட்ட விரோதமான முறையில் மின்சார பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான சட்டவிரோதமான முறையில் மின்சார பாவனையைப் பெற முயன்ற மட்/குறிஞ்சா முனையைச் சேர்ந்த குடும்பஸ்த்தர் ஒருவர் நேற்று முன்தினம் பரிதாபகரமான முறையில் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் கரடியனாற்றுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளும் மட்டக்களப்பு மின்சார சபையினரும் கூட்டாக இணைந்து சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெறும் பொதுமக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதனால் ஏற்படும் உயிராபத்துக்கள் பற்றியும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தலை விடுத்திருந்தனர்.

எனவே மேற்படி பிரதேசங்களிலுள்ள பொது மக்கள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் எனவும் இதிலிருந்து தங்களுக்கு ஏற்படும் உயிராபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவுரை கூறியுள்ளனர்.

## கல்குடா கல்வி பிரிவு அனுதாபம்

ஓய்வு பெற்ற கல்குடா வலய கல்விப்பணிப்பாளர் சி.நாகேந்திரத்தின் மறைவு குறித்து விடுதலைப்புலிகளின் கல்குடாவலயக் கல்விப் பிரிவு அனுதாபம் தெரிவித்துள்ளது.

ஆசிரியராக தனது கல்விப் பணியில் காலடி எடுத்து வைத்த அமரர் சி.நாகேந்திரம் அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக, உதவிக்கல்விப் பணிப்பாளராக, மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்விச் சமூகத்துக்கு சேவைபுரிந்ததுடன் வந்தாறுமூலைக் கிராமத்துக்கும் பல்வேறு சமூக சேவைகளைப் புரிந்துள்ளார். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தமிழில் புத்தாண்டுச் செய்தி

ஒற்றுமையுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் மாத்திரமே சமாதானத்தை நிலை நாட்ட முடியும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்தார். தனிநபர் சுதந்திரம் மனித உரிமைகள் ஆகியவற்றை நிலை நாட்டுவதற்காக ஜனநாயக அரசியலை கட்டி எழுப்ப வேண்டிய தேவை முன்னர் எப்போதும் இல்லாதவாறு தற்போது மேலோங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். புத்தாண்டை ஒட்டி ஜனாதிபதி தமிழில் ஆற்றிய விசேட உரையிலேயே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு செல்லும் பாதையை புனரமைக்கத் தடை

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள தெல்லிப்பளை புற்றுநோய் வைத்திய சாலைக்குச் செல்லும் வீதியைப் புனரமைக்கும் பணிகளைப் படையினர் இடைநிறுத்தியுள்ளனர். இதையடுத்து பணிகள் முடக்கமடைந்துள்ளன.

இதையடுத்து வீதியைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட அனுமதி வழங்குமாறு கோரி வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் ஜே. ஸ்ரீநிவாசன் பலாலி படைத்தலைமையகத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தெல்லிப்பளை சந்தியிலிருந்து புற்றுநோய் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வீதியானது கடந்த யுத்தங்களால் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இவ்வீதியினூடாக புற்றுநோய் வைத் தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், போக்கு வரத்தில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கின. இதனையடுத்து சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து தேசிய வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்வீதியைப் புனரமைக்கத் தேவையான கற்களும் அங்கு பறிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் இதனை அனுமதித்த படையினர் திடீரென இப்பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தமது பகுதிக்குள் வந்து பணிகளில் ஈடுபட அனுமதி மறுத்துள்ளனர். இதனையடுத்து மேற்படி வீதி அபிவிருத்தி பணிகளில் ஈடுபட அனுமதிக்குமாறு கோரி, யாழ். படைத் தளபதிக்கு வீதியமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஜே. ஸ்ரீநிவாசன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். இதன் பிரதிகள் யாழ்.அரச அதிபருக்கும், தெல்லிப்பளை பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# களுவாஞ்சிகுடி பஸ் டிப்போவை ஊழியர்கள் மூட எடுத்த தீர்மானம் எம்.பி. தலையீட்டால் ரத்து

(எம்.யுவராஜ்)

களுவாஞ்சிகுடி நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி ஊழியர்கள் நேற்று டிப்போவை மூடுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலையின் வேண்டுகோளின் பேரில் அது கைவிடப்பட்டது.

களுவாஞ்சிகுடி நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனியில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு இரண்டு மாத காலம் வரை சம்பளம் வழங்கப்படாததையிட்டு கடந்த 26ந் திகதி டிப்போவை மூடுவதற்கான நவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில்பாராளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலை எம்.பியினால் நியூ ஈஸ்ரன் கம்பனி பொது முகாமையாளர் கமுர்தின், தலைவர் இராமநாதன் மற்றும் கம்பனியின் செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது எதிர்வரும் புதன்கிழமை அதாவது நேற்று முன்தினம் இவர்களுக்கான சம்பளம் வழங்கப் படுவதாக உறுதியளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நேற்று முன்தினம் சம்பளம் வழங்கப்படா ததையடுத்து மீண்டும் நேற்று டிப்போவை மூடுவதற்கான நடவடி க்கையில் ஊழியர்கள் ஈடுபட்டார்கள் அவ்விடத்திற்குச் சென்ற பாரா ளுமன்ற உறுப்பினர் ஞா. கிஸ்னப்பிள்ளை எம்.பி ஊழியர்களிடம் இன்று வரு டப்பிறப்பு நாள் இந்த நேரத்தில் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக் கொண் டதற் இணங்க அந்நடவடிக்கை கைவிடப்கட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# புகையிரத நிலையங்களில் புகைத்தல் ஒழிப்பு வாரம்

இன்று தொடக்கம் அமுலாகும் வகையில் நாட்டின் அனைத்துப் புகையிரத நிலையங்களும் புகைத்தல் தவிர்ப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சன நெரிசல் மிக்க நிலையங்களில் புகைத்தலின் மூலம் மக்கள் எதிர் கொள்ளும் சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் துறைமுக அதிகார சபை இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

கொழும்பு கோட்டை மருதானை புகையிரத நிலையங்களில் ஆரம்பமாகும் புகைத்தல் தடைத் திட்டம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் மேலும் புகைவண்டிகளில் புகைத்தல் முற்றாக தடைசெய்யப்படும் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதேவேளை புகையிரத கட்டிடங்கள் அதிகரிக்கப்படுமானால் கட்டண அதிகரிப்பு 8வருடங்கள் கழிந்தே அமுலாக்கப்படும் என்று அதிகார சபையின் தலைவர் வி. எச்.மணதுங்க எமது நிலையத்திடம் கூறினார். கடந்த மார்ச் மாதம் இருந்தே இத் தீர்வு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# நிரந்தரச் சமாதானத்திற்கு அனைவரும் பாடுபட வேண்டும்

பிரதமர் ரணில்

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஜனநாயகத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் மலர்ந்துள்ள புத்தாண்டில் நாட்டு மக்கள் அனைவரும் திட சங்கர்ப்பம் பூண வெண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எவ்வித பேதமும் இன்றி அனைவரும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்றும் தன்னம்பிக்கை வெளியிட்டுள்ளார். புத்தாண்டை முன்னிட்டு பிரதமர் எமக்களித்த வாழ்த்துச் செய்தியிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இந்த ஆண்டில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தடைகளை அகற்றி முன் செல்ல எதிர்பார்க்கின்றோம் என்று விசேடமாக கூறுகின்றேன என்றார்.

## புத்தாண்டு பிறப்புக்கு படையினர் துப்பாக்கி வேட்டு

(நமது நிருபர்)

நேற்று முன்தினம் நள்ளிரவு 12மணிக்கு மட்டுநகர் பகுதியில் உள்ள படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து புதுவருடத்தைக் கொண்டாடினர்.

பட்டாசு சத்தங்களுடன் இடைக்கிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டு 2004ம் ஆண்டு புதுவருடத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்றதைக் காணக்கூடியதாய் இருந்தது.



மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் இணைய மண்டபத்தில் இணையத் தலைவர் எந்திரி என்.வி.ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக வருகை தந்திருந்த ஜஸ்ரீன் ராஜேந்திரம் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட ராஜன் சத்திய மூர்த்தி உரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

# நாட்டின் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படும்

## வூப் ஹக்கீம்

புத்தாண்டில் நாட்டில் உள்ள துறைமுகங்களின் பாரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்படும். இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார். அதன் பிரகாரம் ஜப்பானின் உதவியுடன் காலி துறைமுகத்தில் இரண்டு இறங்குத் துறைகள் அமைக்கப்படவிருக்கின்றன. 12கொள்கலன்கள் கொண்ட இறங்கு துறைகளைக் கொண்டகொழும்பு தெற்குத் துறைகளுக்கான நிர்மாணத் துறைகளும் இந்த ஆண்டு தொடங்கும். தனியார் துறை உதவியோடு அம்பாந்தோட்டை துறைமுகம் ஒலுவில் துறை ஆகியவை தொடர்பான கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. கப்பல் கூட்டுத்தாபனத்தை மீளக் கட்டமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

# உயர் பாதுகாப்பு வலயத்தை பார்வையிட ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வருகை!

(நமது நிருபர்)

குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களைப் பார்வையிடுவதற்கென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இம்மாத நடுப்பகுதி யில் யாழ். வருகைதரவுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் எஸ். செல்வக்குமரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கென நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஆணையாளர். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய உறுப்பினர்களுடன் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரி வித்ததாவது:-யாழ்.குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், அதனால், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சுமார் 400இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக, நாம் உரியவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைகளை தயாரித்துள்ளதோடு, அவற்றை அரசிற்கும் சமர்ப்பித்துள்ளோம்.அத்துடன், உயர்பாதுகா ப்பு வலயத்தினால் மக்கள் அனுப விக்கும் துன்பங்கள் தொடர்பாக நேரில் வந்து ஆராயுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக த்திற்கு அழைப்பு விடுத்திருந்தோம். அதனை அடுத்தே அவர் யாழ்ப்பா ணம் வருகைதரவுள்ளார்.கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் காணாமல் போனோர் தொடர்பாக பல நூற்றுக் கணக்கான முறைப்பாடு கள் எமக்கு கிடைத்து ள்ளன வட பதியில் படையினரால் கைது செய்யப பட்டு காணாமல் போ னோர் பாதுகாவலர் சங்கம் சமர்பித்த பட்டியலை விட மேலும், பலர் எம்மிடம் இது விடயமாக முறையிட்டுள்ளனர்.அது மட்டும ல்லாது, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங் களிலிருந்தும் எமக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்து ள்ளன. காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்ட விசாரணைக் குழு சம்பந் தப்பட்ட வர்களிடம் விசாரணைகளை நடத்தி அண்மையில் அறிக்கையை வெளி யிட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எந்த வொரு குழு மீதும் சட்டநடவடிக்கை எடுப்பதற்கான முழு அதிகாரமும் வழங்கப்படவில்லை. நாம் விசார ணைகளை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் சமர்ப்பிக்க முடியுமே அல்லாமல், அது தொடர்பான தீர்ப்புக்களைக் கூறமுடியாது - என்றார். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகர தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், யாழ் குடாநாட்டின் சுகாதாரம் - கல்வி என்பவற்றின் நிலைமைகள், பொலீஸாரின் நடவடிக்கைகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.பேராசிரியர்களான தயா சோமசுந்தரம், சி.க.சிற்றம்பலம், வ. ஆறுமுகம், சட்டத் தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம், வவுனியா மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ஈ.சகுந்தலா, மனித உரிமைகள ஆணைக் குழுவின் வவுனியா பிராந்தியக்குழு உறுப்பினர் என். நரசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதமாற்றத்தை தடுக்க 60 நாட்களுக்குள் சட்ட மூலம்

(நமது நிருபர்)

குறுக்கு வழிகளில் நடைபெறும் மதமாற்றத்தைத் தடுப்பதற்கான சட்ட மூலத்தை 60 நாட்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பௌத்தசாசன, நீதி, தேசிய நல்லிணக்க அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார எழுத்து மூலம் உறுதியளித்துள்ளார். இதனையடுத்து, இப்பிரச்சினை தொடர்பாக மேற்கொண்டிருந்த சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தை தேசிய சங்க சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினரான வண. ஓமல்பே சோபிததேரர் நேற்று முன்தினம் நள்ளிரவு விட்டார்.

இச்சட்டமூலத்தை தயாரிப்பதற் கென மகா சங்கத்தினரைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்படுமெனவும் அமைச்சர் லொக்குபண்டார உறுதியளித் திருக்கிறார். இக்குழு அமைக்கப்பட்டிருப்பதை 14 தினங்களுக்குள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கவும் உறுதியளிக்கப் பட்டிருக்கிறது. தேசிய சங்க சம்மேளனத்தின் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தேரர் தலைமையிலான மகா சங்கத்தி னருடன் அமைச்சர்களான கருஜய சூரிய, லொக்கு பண்டாரா, பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் என். டபிள்யூ.வெரலுபிட்டிய ஆகியோர் நேற்று முன்தினம் இரவு பௌத்த சாசன அமைச்சில் விசேட கலந் துரையாடல் ஒன்றை நடத்தினர். அப்பொழுது உறுதி மொழிகள் அட ங்கிய பத்திரத்தை அமைச்சர் லொ க்கு பண்டார கையளித்தார். அதனையடுத்து, அமைச் சர்கள் சகிதம் உண்ணா விரதம் மேற்கொள்ளப் பட்ட இடத்துக்கு வந்த வண. எல்லாவல மேதானந்த தேரர் உறுதி மொழிப் பத்திரத்தை வாசித் துக் காட்டிக் உண்ணா விரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

# பிரதமர் இணங்கா விட்டால் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி எச்சரிக்கை

(நமது நிருபர்)

சமாதானப் பேச்சுக்கள் தாமதமடைய ஜனாதிபதியே காரணம் என்றும், பிரதமருடனான அரசியல் நெருக்கடி தொடரக் கூடாது என்றும் அமெரிக்கா கொடுத்த அழுத்தத்தை உதறித் தள்ளினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதே வேளை, தேசிய நல்லிணக்க அரசை ஏற்படுத்த அரசும், பிரதமரும் இணக்கம் தெரிவிக்காவிட்டால் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத் திருக் கிறார்.மூன்று முக்கிய அமைச் சுக்களைப் பொறுப்பேற்றதையடுத்து அனைத்துக் கட்சிகளையும் கொண்ட நல்லிணக்க அரசு ஒன்றை ஏற்படு



த்தும் முயற்சி யில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி, ஐக்கிய தேசிய முன்னணி அரசும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அம்முயற் சிக்கு இணக்கம் தெரிவிக்காவிட்டால் ஜனநாயக வழியிலான மாற்று நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி யிருக்கும் என்பதை நேரடியாகத் தெரிவித்திருக்கிறார். மாற்று நடவடிக்கை என்று குறிப்பிட்டிருக்கும் ஜனாதிபதி, அந்த நடவடிக்கை என்ன என்பதை வெளியிடவில்லை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுபாரதி' நிகழ்ச்சிக்கு நேற் றுக்காலை வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி மாற்று நடவடிக்கை குறித்து குறிப்பிட்டிருக்கிறார்.

செவ்வியில் ஜனாதிப்தி மேலும் கூறுகையில், நல்லிணக்க அரசுக்கு இணக்கம் தெரிவிப்பதற்கு தாம் முன் வரவில்லையென்ற குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்தார். சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் கோரிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு தம்மாலான சகல நடவடிக்கைகளை யும் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசிடம் சுய நம்பிக்கையில்லாத காரணத்தினாலேயே இத்தகைய குற்றச்சாட்டுக்களை அது வெளியிட்டு வருகிறது. ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளே இதற்குப் பொறுப்பு என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துருகிரிய மிலேனியம் நகர இல்லம் சம்பந்தமாக விடுக்கப்பட்ட வினாவொன்றுக்குப் பதிலளித்த ஜனா திபதி, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கென நியமிக் கப்பட்ட ஆணைக்குழுவினால் புதிய தொரு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது எனவும் கூறினார். புதிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி செவ்வியில் கூறியிருக்கிறார்.இதற்கிடையே, அமெரிக்காவின் அழுத்தம் குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் ஊடகப் பணிப் பாளரான ஜனதாஸ பீரிஸ், சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பமாக ஜனாதிபதி சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார் எனத் தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்பு, உள்துறை, ஊடகத் துறை ஆகிய அமைச்சுகளை ஜனாதிபதி கையேற்பதற்கு முன்னரே சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப் பட்டு விட்டன எனவும் அவர் கூறினார்

# எயிட்ஸ் கருத்தரங்கிற்கு சென்றவர்களை சிறிலங்கா படையினர் தடுத்தனர்

(நமது நிருபர்)

எயிட்ஸ்' விழிப்புணர்வுக்கருத்தரங் கில் கலந்துகொள்ளச் சென்றவர்கள் படையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என முறை யிடப்பட் டுள்ளது. எயிட்ஸ் விழிப்புணர்வு வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் கரவெட்டி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வருகை தந்த ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், பல் கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரே இராணுவத்தினராலும், பொலிஸாரினாலும் துருவித்துருவி விசார ணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இத்தகைய சம்பவங்களை தமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என்றும், வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தச் சம்பவம் தொடர்பாக மேற் படி ஒன்றியம், போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

# பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலியிருந்து 600 மீற்றர் தொலைவில் குடியமரலாம்

## படைத் தலைமையகம் அறிவிப்பு

(நமது நிருபர்)

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து 600 மீற்றர் தொலைவில் உள்ள வீடுகளில் மக்கள் மீளக் குடியமரவும், அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் படை யினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பலாலியிலுள்ள யாழ் .பாதுகாப்புப் படைத் தலைமையகம் இவ்வாறு அறிவித்திருக்கின்றது. இதுதொடர்பாக இராணுவம் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்த போதிலும், அதுபற்றி பொதுமக்களுக்கு முறைப்படி அறிவிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை அடுத்தே இந்தப் புதிய அறிவிப்பு விடுக்கப்படுவதாக படைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து (பாதுகாப்பு வேலி) 600 மீற்றர் தூரத்திலுள்ள வீடுகளில் மீளக் குடியமரவும், அப்பகுதியில் விவசாயத்தை மேற்கொள்ளவும் பாதுகாப்புத் தலைமையகம் இணக்கம் தெரிவித்துள்ளபோதிலும், அது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட வில்லை என 2003-12-23 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின்போது யாழ். அரசசார்பற்ற நிறுவனப் பிரதி நிதிகள் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியிடம் தெரிவித்துள்ளனர். வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும் நோக்குடன் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இந்தத் தகவலை மீள அறியத் தருகின்றோம்.

வீடுகளில் மீளக் குடியமரவும், அப் பகுதியில் விவசாயத்தை மேற்கொள்ளவும் பாதுகாப்புப் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் தமது வீடு, காணி தொடர்பான உரிமை களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

இந்தப் பகுதியில் மீளக் குடியமரவும் விவசாயத்தில் ஈடுபடவும் விரும்பு வோர்கள் இடத்தை அறிந்துகொள்ளும் பொருட்டு உயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பு வேலியில் இருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அடையாள மிடப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியில் மீளக் குடியமர விரும்புவோர்கள் தமது பிரதேச கிராம உத்தியோகத்தர்களின் உதவியுடன் அருகிலுள்ள பாதுகாப்பு முகாம்களில் கடிதம் மூலம் அறியத் தரும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் மேலோங்கி, அமைதியை நிலைநாட்ட 2004 ஆம் ஆண்டு சுபீட்சமான ஆண்டாக அமைய வேண்டும் என்பதே பாதுகாப்புப் படையினரின் எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு கிடைக்குமென நாம் நம்புகிறோம்.இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# தமிழினம் செழித் தோங்கட்டும்

(நமது நிருபர்)

தமிழர்கள் தொடர்ச்சியாக இணைந்து செயற்பட பிறக்கின்ற புத்தாண்டு வழிசமைக்கட்டும். இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் ஆரம்பமாகிய 2003ஆம் ஆண்டு முழுமையாக தமிழர்களின் திருப்தியை பூர்த்தி செய்ய வில்லை. ஆயினும், பல்வேறுபட்ட வரலாற்றுத் தடங்களைப் பதித்தே சென்றுள்ளது. இதில் முதன்மையானதும் முன்னேற்ற கரமானதுமாக இருப்பது விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கலாத் தீர்வுக்கான முன்மொழிவுகள் ஆகும்.

கடந்த 20வருட காலத்தில் யுத்தம் அற்ற ஆண்டாக 2003 ஆம் ஆண்டு கழிந்துள்ளது என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடய மே! இருந்தாலும் தென்னிலங் கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள், மக்கள் மத்தியில் அச்சத்தையும் நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

போர் முனையில் வீரத்தைக் காட்டிய தமிழர்கள், இராஜதந்திர ரீதியிலும் தமது ஆளுமைப் பலத்தைக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே இராஜதந்திர ரீதியில் வெற்றிபெற முடியும். அதற்காக நம்பிக்கையுடன் செயற்படுவோம். இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். என்றுள்ளது.

# டுபாயில் வேலை தருவதாகக் கூறிதாய்லாந்தில் கைவிடப்பட்ட 5 வாலிபர்கள் மிட்பு!

டுபாயில் வேலைக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி தாய்லாந்தில் இறக்கி விடப்பட்டு அங்கு சிரமப்பட்ட ராமநாதபுரம் இளைஞர்கள் 5 பேரை ரரமநாதபுரம் எஸ்.பி.நடவடிக்கை எடுத்து மீட்டுள்ளார். அது பற்றிய விபரமாவது:

ராமநாதபுர மாவட்டம் உப்பூர் அருகேயுள்ள ஊரனக்குடியைச் சேர்ந்த காவிரிராஜன், ஆர்.எஸ்.மங்கலம் பெரியார் நகரைச் சேர்ந்த சதீஸ்பாபு, தேவிபட்டிணம் கடந்த நவம்பர் மாதம் இவர்கள் அனைவரையும் ஏஜெண்ட் சிமியோன் என்பவர் துபாய்க்கு அழைத்துச் செல்வதாகக் கூறி தாய்லாந்து செல்லும் விமானத்தில் ஏற்றி அங்கு அழைத்துச் சென்றுள்ளார்.

தாய்லாந்து சென்று அங்கிருந்து வேறு விமானம் மூலம் தான் டுபாய்க்குச் செல்ல வேண்டும் என்று கூறியிருக்கிறார். தாய்லாந்து தலைநகர் பாங்காக் இறங்கி ஏஜெண்ட் சிமியோன் அங்கிருந்த அஹமதுபாய் என்பவரிடம் 8 பேரையும் ஒப்படைத்து விட்டு தலைமறைவாகி விட்டாராம்.

இந்நிலையில் தனியார்த் ஹோட்டல் ஒன்றில் இவர்கள் சிறை வைத்து மேலும் பணம் தந்தால்தான் விடுவோம் என்று மிரட்டியுள்ளனர். உடனே, அந்த இளைஞர்கள் உப்பூரில் உள்ள உறவினர்களுக்கு போன் மூலம் தகவல் கொடுத்துள்ளனர். அவர்களுடைய உறவினர்கள் ராமநாதபுரத்தில் உள்ள எஸ்.பி.அசோக் குமார்தாஸிடம் புகார் செய்தனர்.

உடனடியாகச் செயல்பட்ட எஸ்.பி.அசோக்குமார்தாஸ் டெல்லியில் உள்ள தாய்லாந்து தூதரகத்துடன் தொடர்புகொண்டு சிறை வைக்கப்பட்டுள்ள ராமநா தபுரம் வாலிபர்களை மீட்க நடவடிக்கை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து காவிரிராஜன், சதீஸ் பாபு உட்பட 5 பேர் அங்கிருந்து விடுவித்து சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும், குணசேகரன், செல்லகருங்கு, சந்திரசேகரன் ஆகியோரையும் மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக எஸ்.பி.கூறினார்.

வெளிநாட்டில் தவித்த ராமநாதபுரம் இளைஞர்களை மீட்க நடவடிக்கை எடுத்த ராமநாதபுரம் எஸ்.பி.அசோக்குமார்தாஸ் க்கு இளைஞர்களின் உறவினர்களும் பொதுமக்களும் பெரிதும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ராமநாதபுரம் எஸ்.பி.அசோக்குமார்தாஸ் கூறுகையில் தற்போது தாய்லாந்தில் தவித்து வரும் 3 இளைஞர்களை மீட்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வெளிநாட்டில் வேலை பார்க்க ஆசைப்பட்டு ஏஜெண்டுகள் மூலம் செல்லும் இளைஞர்கள் தங்களுக்கு விசா வந்ததாக ஏஜெண்டுகள் கூறியவுடன் காவல் நிலையத்தை தொடர்பு கொண்டு அது உண்மையான விசாதானா, ஏஜெண்ட் கூறுவது சரியான தகவல்தானா என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் பணம் செலுத்த வேண்டும். என கூறினார்.

# இந்தியா அடுத்த மூன்று மாதங்களில் அக்னி ஏவுகணை பரீட்சிப்பு!

அடுத்த 3 மாதங்களில் அக்னி 3, ஏவுகணை வெற்றி கரமாக அனுப்பப்படும் என்றும் அதற்கான தொடர் பரிசோதனைகள் நடந்து வருவதாகவும் மூத்த பாதுகாப்புத்துறை விஞ்ஞானி டாக்டர் வி.கே. அட்ரே தெரிவித்துள்ளார்.

இந்தியா-ரஷ்யா கூட்டுறவோடு கடற்படையினரின் மேற்பார்வையில் பிரம்மாஸ் ஏவுகணைகள் முழு வெற்றி அடைந்த நிலையில் உள்ளது. இதேபோல் விமானப்படையினரின் மேற்பார்வையில் எஸ்-யு-30 ரக போர்ப்படை விமானங்கள் பரிசோதனை ஓட்டம் முடிந்து தயார் நிலையில் உள்ளதாகவும் அட்ரே தெரிவித்தார்.

எலக்ட்ரானிக் முறையிலான போர் ஆயுதங்களை இஸ்ரேலிய எல்பிட் கம்பெனியாருடன் இணைந்து தயாரிக்க முடிவு செய்துள்ளதைப் பாதுகாப்புத்துறை அமைச்சரின் ஆலோசகர் தெரிவித்துள்ளனர். ராடார் முதலிய நவீன ரக ஆயுதங்களில் இந்தியா முதன்மை நிலை அடைந்துள்ளதை டாக்டர் அட்ரே சுட்டிக் காட்டினார். அமெரிக்காவிலிருந்து 8 ரத்தியான் வகை ராடார்களை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் ரேத்தியான் வகை ரேடர்கள் 2 இந்திய ராணுவத்திடம் ஏற்கனவே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாக்தாத் விடுதியில் கார்குண்டு வெடிப்பு ஐவர் பலி!

மத்திய பாக்தாத்தில் கடந்த புதனிரவு இடம் பெற்ற கார் குண்டு வெடிப்பில் சம்பவம் நடந்த இடமான உணவு வீடுதியொன்றில் புது வருடப் பிறப்பைக் கொண்டாடிக் கொண்டிருந்த ஐவர் பலியாகினர்.

சிரேஷ்ட பிரதி உள்விகார அமைச்சரான ஜெனரல் அஷ்மட் கா திம் இப்றாகிம் இது பற்றிக் கூறுகையில் கொல்லப்பட்ட ஐவரும் ஈராக் கியர்கள் எனவும் மேலும் 15 ஈராக்கியர்கள் அடங்கவாக 21 பேர் காயம டைந்ததும் உள்ளனர் எனவும் தெரி வித்தார்.

காயமடைந்தவர்கள் எலாஸ் ஏஞ்ச்ஸ் ரைம்ஸ் பத்திரிக்கையின் நிருபர்கள் மூலம் அடங்குகின்றனர் மேற்கத்தையவர்களிடையே பிரபல்யமான இந்த உறவு விடுதியும் மேலும் நான்கு கட்டிடங்களும் குண்டு வெடிப்பிலே தரை மட்டமாகின. குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து தீச்சுவாலைகள் ஆகாயத்தை நோக்கி எழுந்தன.

ஆறு நாட்கக்கு முன்னதாகவே இத்தகைய தாக்குதல் இடம் பெறும் சாத்தியம் உள்ளதாக அதிகாரிகள் தகவல்களைப் பெற்றுக் கொண்ட போதும் இலக்கு எது என்பது சரியாக இனம் காட்டப்படவில்லையென இப்றாகிம் மேலும் தெரிவி த்தார்.

பொலிசாரை உசார்நிலையில் இருக்கும் படியும் சோதனைச் சாவடிகளை அமைக்கும் படியும், புது வருடக் கொண்டாட்டங்களை நடாத்தும் விடுதிகளுக்கு அருகில் காதர்களை தரித்து நிற்க அனுமதிக்க வேண்டாமென்றும் தான் பணிப்புரை விடுத்ததாக இப்றாகிம் தொடர்ந்து தெரிவித்தார்.

ஈராக் தலைநகரின் வர்த்தக மாவட்டமொன்றில் உணவும் தங்குமிட வசதியும் உள்ள



நாளில் விடுதிக்கு வெளியே நிறுத்தப்பட்ட காரிலிருந்தே குண்டு வெடித்ததாகவும், இவ் விதியானது புது வருடக் கொண்டாட்டங்களை விளம்பரப் படுத்தியதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இரவு 9.20 மணியளவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் பாரிய சத்தம் கேட்டதாகவும், குண்டு வெடிப்பு நடந்த இடத்திலிருந்து ஒரு மைல் தொலையில் உள்ள சி.என்.என் செய்தி நிறுவன உழியர்கள் தங்கியிருந்த ஹோட்டல் அதிர்ந்ததாகவும் தெரியவருகின்றது.

மேலும் குண்டு வெடிப்பு நடந்த இடத்திலிருந்து 200 அடி தொலைவில் உள்ள கட்டடங்களின் கண்ணாடிகள் நொருங்கியதாகவும், வீதியெங்கும் கண்ணாடிச் சிதல்கள் குவிந்து கிடந்ததாகவும் செய்திகள் கூறினர். சம்பவம் நடந்த போது விடுதியினுள்ளே இருந்த விருந்தாளிகள் பெரும் பாலானோர் மேற்கத்தைவர்கள் என விடுதிலிருந்து வெளியேறிய ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் நடந்து அரை மணித்தியாலத்தினுள் சுமார் 40 அமெரிக்கப் படையினர் வெடிபொருள் கண்டு பிடிங்கும் கருவியுடன் பிரதேசமெங்கும் தேடுதல் நடாத்தினர்.புதுவருடப் பிறப்பை முன்னிட்டு தாக்குதல்கள் அதிகரிக்கப்படலாம் என்ற எதிர் பார்ப்பில் அமெரிக்கப்படைகள் முன்னமேயே உஷார் நிலையில் வைக்கப்பட் டிருந்தமை குறிப்பிடதக்கதாகும்.

## உலகச் செய்திகள்

# அஸ்ஸாமில் 16 தீவிரவாதிகள் சரண்!

நேற்று ஜார்கட்டில் 16 பயங்கர தீவிரவாதிகள், 41-வது துணை ராணுவ பிரிகேடியர் எஸ்.என். ஷேத்தியா முன்னிலையில் சரணடைந்தனர். இவர்களில் 15 பேர் உல்பா தீவிரவாதிகள். மற்றும் ஒருவன் முல்டா என்ற தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவன். தீவிரவாதிகள் சரணடைந்த பொழுது தங்களிடம் இருந்த துப்பாக்கிகள் மற்றும் இரண்டு கைத் துப்பாக்கி, வெடிமருந்து வெடிக்க செய்யும் கருவிகள், நான்கு கை எறி குண்டுகள், ராணுவ தளபாடங்கள் மற்றும் ஆவணங்களை ஒப்படைத்தனர்.

ஜார்கட் துணை ஆய்வாளர் ரவி கோடா மற்றும் பொலீஸ் சூப்பிரண்டன்ட் பி.சி.ஜலோய் ஆகியோர் தீவிரவாதிகள் சரணடையும் பொழுது உடனிருந்தனர். அப்பொழுது பேசிய ராணுவ பிரிகேடியர் ஷேத்தியா சரணடைந்த தீவிரவாதிகள் அசாம் பகுதியில் தடை செய்யப்பட்ட தீவிரவாக இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் இன்றைய இளைஞர்கள் தவறுதலாக வழி நடத்தப்பட்டு அர்த்தமற்ற வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இவர்கள் வன்முறையை கைவிட்டு நாடு முன்னேற்றத்திற்கு தங்கள் பங்களிப்பை தர முன் வரவேண்டும் என கேட்டுக் கொண்டார். சரணடைந்த தீவிரவாதிகள் அனைவரும் காட்டுஷ பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ராணுவ முகாம்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் சரணடைந்த அவர்கள் பாதுகாப்பாகவும், நேர்மையான முறையிலும் மாவட்ட நிர்வாக உதவியோடு நடத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# சென்னை புலனாய்வு பிரிவினரால் செம்மரக் கட்டைகள் பறிமுதல் பெறுமதி 5 கோடிக்கு மேல்!

சென்னை மத்திய புலனாய்வு இயக்குனரகம் சார்பில் ரூ.2 கோடியே 20 லட்ச ரூபாய் மதிப்புள்ள செம்மரக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து வெளிவந்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை, மத்திய புலனாய்வு இயக்குனரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் இவ்வாண்டில் மொத்தம் 56 மெட்ரிக் தொன் எடையுள்ள கடத்தல் செம்மரக் கட்டைகளை பறிமுதல் செய்துள் ளனர்.

இந்தக் கட்டைகளின் மொத்த மதிப்பீடு ஐந்து கோடியே இருபது லட்ச ரூபாய் என்றும் இவை சென்னை, தூத்துக்குடி துறைமுகங்களின் மூலமாக கடத்தப்பட இருந்ததாகவும் இந்தக் கடத்தலில் நான்கு நபர்கள் ஈடு பட்டதாகவும் அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டு காஃபிபோசா சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருவாய் புலனாய்வுத் துறை அலுவலர்கள் மலேசியாவுக்கு கடத்தவிருந்த ஆறு மெட்ரிக்தொன் எடையுள்ள செம்மரக் கட்டைகளை சென்னையில் நேற்று பறிமுதல் செய்யப்பட்டது. அவற்றின் மொத்த மதிப்பு நான்கு லட்ச ரூபாய் ஆகும். செம்மரக் கட்டைகளைக் கடத்திய நபர் இவற்றை மிளகாய் வத்தல் என்றும் அவை 300 கோணிப்பைகளில் அடைக்கப்பட்டு ஏற்கனவே கடந்த 14-ஆம் திகதி அனுப்பியதா கவும் ஆய்வின்போது தெரிவித்துள்ளார். ஆனால் கடத்தப்பட்ட இந்த செம்மரக் கட்டைகளின் மதிப்பு 48 லட்சம் ரூபாய் என்றும் மொத்தம் 12 மெட்ரிக் தொடன் எடையுள்ள செம்மரக்கட்டைகள் கடத்தப்பட்டதாகவும் ஆய்வின் போது கண்டுபிடிக்க ப்பட்டிருக் கிறது. இந்த நபர் ஒன்பது மெட்ரிக் தொன் எடையுள்ள 36 லட்ச ரூபாய் மதிப்பிலான செம்மரக் கட்டைகளை கடந்த 20-ம் திகதி கடத்தியதாகவும், அவற்றை சென்னை மத்திய வருவாய்துறை புலனாய்வு அலுவலர்கள் அந்த செம்மரக் கட்டைகளை பறிமுதல் செய்ததாகவும் அந்த நபர் அந்த கட்டைகளை சிங்கப்பூருக்கு மிளகாய் வத்தல் என்று அனுப்ப இருந்ததாகவும் ஆய்வின் போது தெரிய வந்தது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது

# மயக்க பிஸ்கட் ஆசாமி மடக்கி பிடிபட்டார்!

மயக்க பிஸ்கட் மூலம் கொள்ளை அடித்து வந்த கொள்ளையனை ரயில்வே பொலிசார் வளைத்துப் பிடித்தனர். மயக்க பிஸ்கட் பாக்கெட், செல் போன், ரூ.92 ஆயிரம் ரொக்கப் பணத்தை கைப்பற்றினர்.

இது குறித்து ரயில்வே பொலிசார் கூறியதாவது:- சம்பவத்தன்று சாந்தராம் என்பவர் ஜெய்ப்பூருக்கு செல்ல சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு வந்தார். அப்போது டிப்டாப் ஆசாமி ஒருவர் ப்ளாட்பாரத்தில் செல்போனில் பேசிக்கொண்டு இருந்தார். கடந்த முறை அந்த ஆசாமிதான் மயக்க பிஸ்கட் கொடுத்து சுமார் 1 1/2 லட்சத்தை அபேஸ் செய்தவன் என்று சாந்தராம் கண்டுகொண்டார்.

உடனே இதுபற்றி ரயில்வே பாதுகாப்பு படை பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் சாந்தாராம் தகவல் கொடுத்தவுடன் விரைந்து வந்த பொலிசார் டிப்-டாப் ஆசாமியை பொலிசார் மடக்கிப் பிடித்து விசாரித்தனர்.

அந்த ஆசாமியிடம் மயக்க பிஸ்கட் பாக்கெட், செல்போன், ரூ.92 ஆயிரம் ரொக்கப்பணம் இருந்தது. இவற்றை பொலிசார் கைப்பற்றினார்கள். அந்த ஆசாமியின் பெயர் முகமது ஆசன்(25), பீகாரைச் சேர்ந்தவன் என்று விசாரணையில் பொலிசார் கண்டுபிடித்தனர். இவர் நீண்டகாலமாக ரயில் பயணிகளிடம் மயக்க பிஸ்கட் கொடுத்து கொள்ளையடித்து வந்தவன் என்று விசாரணையில் தெரிய வந்தது. பாதுகாப்பு படை பொலிசார் அந்த ஆசாமியை ரயில்வே பொலிசார் ரிடம் ஒப்படை த்தனர். ஐ.ஜி.சேகர் உத்தரவின் பேரில் சென்ட்ரல் ரயில்வே பொலிசார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

# இந்துக்களின் உருவ வழிபாடு பற்றி விவேகானந்தர் என்ன சொல்கின்றார்?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒரு உருவத்தின் மூலமாக தெய்வீக நிலையை ஒருவன் உணர முடிகிறது என்றால் அதைப் பாவம் என்று கூறுவது சரியா? இல்லை அவர் அந்த நிலையைக் கடந்த பிறகு அவரே அதைப் பிழை என்று கூறலாமா? இந்துவின் கொள்கைப்படி பிழையிலிருந்து உண்மைக்குச் செல்லவில்லை. ஆனால் உண்மையிலிருந்து உண்மைக்கு அதாவது கீழ் நிலை உண்மை யிலிருந்து மேல் நிலை உண்மைக்குப் பயணம் செய்கின்றான்.

அவனுக்கு சடப் பொருள் வழி பாட்டிலிருந்து அத்வைதம் வரையில் உள்ள எல்லாச் சமயங்களும் பரம் பொருளைப் பற்றி, உணர்வதற்காக மனித ஆன்மாவால் செய்யப்படும் பல முயற்சிகளே ஆகும். ஒவ்வொன்றும் அது பிறந்த இடத்தையும், சூழ் நிலையையும் பொறுத்தது. ஒவ்வொன்றும் முன்னேற்றத்தின் ஒரு படியைக் குறிக்கிறது. ஒவ்வெரு ஆன்மாவும் மேலே மேலே பறந்து செல்லும் ஓர் இளங்கழுகைப் போன்றது. அது உயரச் செல்லச் செல்ல மேலும் வலுவைப் பெற்று கடைசியில் அது ஒளி மிக்க சூரியனை அடைகிறது.

வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் இயற்கையின் நியதி. அதை இந்து உணர்ந்துள்ளான். மற்ற சமயங்கள் எல்லாம் சில திட்டமான கோட்பாடுகளை நிர்ணயித்து அவற்றைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த முயல்கின்றன. அவை சமுதாயத்திற்கு முன்னே ஒரே ஒரு சட்டையை வைத்து, அந்த ஒரு சட்டைதான் ஜாக், ஜான், ஹென்றி எல்லோருக்கும் பொருந்த வேண்டும் என்று கூறுகின்றன. ஜானுக்கோ, ஹென்றிக்கோ சட்டை பொருந்தாவிட்டால் அவர்கள் உடலில் அணிய சட்டை இன்றித்தான் இருக்க வேண்டும்.

ஆனால் சார்புப் பொருட்கள் மூலமே இறைவனை உணரவோ, நினைக்கவோ, பேசவோ முடியும். திருவுருவங்களும், சிலுவைகளும், பிறையும் வெறும் சின்னங்களே. ஆன்மீகக் கருத்துக்களை மாட்டி வைப்பதற்குப் பயன்படும் முனைகளே என்று இந்துக்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த உதவி எல்லோருக்கும் தேவை என்பதன்று. ஆனால் தேவைப் படாதவர்கள் அது தவறு என்று கூற அவர்களிற்கு உரிமையில்லை. இந்து சமயத்தில் அது கட்டாயமும் அன்று.

ஒன்று நான் சொல்ல வேண்டும் இந்துக்களின் உருவ வழிபாடு அச்சத்திற்குரிய ஒன்றல்ல. மாறாக ஆன்மீக உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கு பக்குவப்



பட்டவர்களின் முயற்சியாகும். அது இந்துக்களிடம் தவறுகள் உண்டு. சில வேளைகளில் விதி விலக்குகளும் உண்டு. ஆனால் ஒன்றைக் கவனியுங்கள் அவர்கள் தங்கள் உடல்களைப் பலவாறு வருத்திக் கொள்வார்களேயன்றி அடுத்தவர்களின் கழுத்தை அறுக்க மாட்டார்கள். இந்து மத வெறியன் தன்னைத் தீயில்

செல்வி: கி.ஹேமலதா

கொளுத்திக் கொள்வானேயன்றி பிறரையல்ல. சூனியக்காரிகள் கொழுத்தப்பட்டதற்கு எப்படி கிறிஸ்தவ சமயம் பொறுப்பில்லையோ அதே மாதிரி அதற்கு இந்து சமயம் பொறுப்பல்ல.

ஆகவே இந்துவுக்கு உலகின் எல்லாச் சமயங்களும் பலவித நிலைகளிலும், சந்தர்ப்பங்களிலும் உள்ள மாறுபட்ட ஆண்களும் பெண்களும் ஒரே இலக்கை நோக்கி பயணம் செய்வது போலத்தான் சடப் பொருளான மனிதனிடமிருந்து கடவுளை வெளிப்படையச் செய்வது தான் சமயங்களின் நோக்கமும் அவர்கள் எல்லோருக்கும் எழுச்சியை ஊட்டுகிறவர் ஒரே கடவுள் தான். அப்படியானால் இத்தனை மாறு பாடுகள் இருக்கக் காரணம் என்ன? அவை அனைத்தும் வெளித்தோற்றமே பல்வேறு இயல்புகளிற்கும் ஏற்பதன்னை மாற்றியமைத்துக் கொள்ளும் அதே உண்மையிலிருந்து தான் இந்த மாறுபாடுகள் எழுகின்றன.

ஒரே ஒளிதான் பல்வேறு வண்ணக் கண்ணாடிகளின் மூலம் பல நிறங்களில் வருகின்றது. நம்மை மாற்றியமைத்துக் கொள்ள இந்த வேறுபாடுகள் அவசியம். ஆனால் எல்லாவற்றின் மையத்திலும் அதே உண்மைதான் ஆட்சி புரிகிறது. கிருஷ்ணாவதாரத்தின் போது பகவான் இந்துக்களுக்குச் சொன்னார் ''முத்து மாலையின் நடுவே உள்ள கயிறு போன்று நான் எல்லாச் சமயங்களிலும் இருக்கின்றேன். மக்களினத்தை உயர்த்திப் புனிதப்படுத்தும் அசாதாரணமான தூய்மையும், ஆற்றலும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் நான் இருக்கின்றேன் என்று அறி" என்று அதன் பலன் என்ன? இந்துக்கள் மட்டுமே காப்பாற்றப் படுவார்கள் மற்றவர்கள் அல்ல என்று சமஸ்கிருத தத்துவ இலக்கியத்தில் எங்காவது கூறப்பட்டிருக்கிறதா என்று கண்டு பிடிக்கும் படி நான் உலகத்திற்குச் சவால் விடுகிறேன். வியாசர் கூறுகிறார் ''நம்முடைய சாதிக்கும், கோட்பாடுகளுக்கும் அப்பால் கூட பூரண மனிதர்களைப் பார்க்கின்றோம்" என்று. இன்னொன்று எண்ணங்களெல்லாம் கடவுளிடமே மைய சக்கி கொண்ட இந்து எப்படி இனிய வாதம் பேசும் பௌத்தர்களையும் நாத்திக வாதம் பேசும் சமணர்களையும் நம்புவான்?

பௌத்தர்களோ, சமணர்களோ கடவுளை நம்பி வாழ்வதில்லை. ஆனால் மனிதனை தெய்வமாக்க வேண்டும் என்னும் எல்லாச் சமயங்களின் மையக்கருத்து இருக்கிறதே. அதுதான் அவர்கள் தந்தையைப் பார்ப்பதில்லை ஆனால் மகனைப் பார்த்துள்ளார்கள். மகனைப் பார்த்தவன் தந்தையையும் பார்த்து விட்டான். சகோதரர்களே இந்து சமயக் கருத்துக்களின் சுருக்கம் இதுதான். தன் திட்டங்களை எல்லாம் நிறை வேற்ற இந்து தவறியிருக்கலாம். ஆனால் என்றாவது உலக சமயம் (Universal Re ligion) என்ற ஒன்று இருக்க வேண்டுமானால் அது இடத்தாலும் காலத்தாலும் எல்லைப் படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். அந்தச் சமயம் யாரைப் பற்றிப் பிரசாரம் செய்கிறதோ அந்தக் கடவுளைப் போன்று அது எல்லையற்றதாக இருக்க வேண்டும். *(முற்றும்)*

## ஆன்மீக அலை

~சேனாக் கூனா~

### நன்றியுடன் கர்த்தரை ஸ்தோத்தரிப்பாயாக!

உம்மை நம்புகிறவர்களுக்கு நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடயை நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது.

(சங்:31:19)

தேவன் நமக்காக உண்டு பண்ணி, ஆயத்தம் பண்ணியிருக்கிற நன்மைகளை நம்முடைய மனக் கண்கள் காணும் என்றால் நாம் பாக்கியவான்களாக இருப்போம்.

அவர் இம்மைக்காக மாத்திரம் ஆயத்தம் பண்ணுகிறவர் அல்ல. நித்தியத்திற்கும், மேன்மையான காரியங்களை நமக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிறார்.

நமது அன்புள்ள பரமதகப்பன் அல்லவா அவர்! கர்த்தர் நமக்காக எல்லாவற்றையும் எப்போதும் ஆயத்தம் பண்ணினார் தெரியுமா?

உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே அவைகளை உண்டு பண்ணிவிட்டார்.

நமக்கு மகிமையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர் முன்பாகவே தீர்மானித்து விட்டார்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்திலே கொடுப்பதற்காக மன்னாவையும், காடைகளையும், பஞ்சகாலத்திலே எலியாவைப் போஷிப்பதற்காக காகங்களையும் சமாரியா மக்களை பஞ்சகாலத்திலே போஷிக்கும் படியாகத் தானியத்தையும் ஆயத்தப்படுத்தியிருந்தார்.

கர்த்தருடைய வசனத்தைக் கேட்க வனாந்ரத்திற்கு வந்த ஜனங்களுக்கெல்லாம் உணவு கொடுக்கும்படி ஒரு சிறு பையனுடைய உள்ளத்தை ஆயத்தப்படுத்தியிருந்தார். அவன் கொடுத்த உணவின் மூலமாக எல்லோருக்கும் போஜனம் கொடுக்க வல்லவராயும் இருந்தார்.

தேவ பிள்ளையே, கிறிஸ்து தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின் படியே உன்னுடைய குறைகளையெல்லாம் நிறைவாக்க எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தியிருக்கிறார் என்பதை விசுவாசத்தோடு உணர்ந்து கர்த்தரை நன்றியாய் ஸ்தோத்தரிப்பாயாக!

### எல்லாமும் அல்லாஹ் தான்!

''உங்களில் மரிக்கும் ஒருவரின் உயிர் தொண்டைக் குழியை அடைந்தால், அந்நேரத்தில் நீங்கள் இறைவனுக்குச் சமீபமாக இருந்தும் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறீர்கள்"

குர்ஆனின் இந்தத் திருவசனங்கள் அனைத்தும் அல்லாஹ்தான் மரணிக்கச் சொய்கிறான் என்பதை நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. விஞ்ஞானிகள் சொல்வது போன்று சில பொருட்களின் இரசாயன சேர்க்கையின் குறைவால் ஏற்படுவதல்ல மரணம். ஏனெனில் இந்த இரசாயனப் பொருட்கள் இறந்துபோன உடலிலும் இருக்கவே செய்கின்றன. மரணத்தை அல்லாஹ்தான் ஏற்படுத்துகின்றான். என்பதில் நமக்குச் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் அவன்தான் உயிர்ப்பிக்கிறான் என்பதை நம்புவதற்கும் நம்மனம் சற்றுத் தயங்குகிறது. குர்ஆன், ஹதீஸ்களில் வந்திருக்கிறது என்பதால் நம்புகிறோம். ஆம் யாவற்றையும் அல்லாஹ்தான் செய்விக்கின்றான்.

### நீதி மொழிகள்

01. அறிவை விரும்புவோர் கண்டித்துத் திருத்தப்படுவதை விரும்புவர். கண்டிக்கப்படுவதை வெறுப்போர் அறிவற்ற விலங்குகள் ஆவர்.

02. வீட்டில் உணவில்லாதிருந்தும் வெளியில் பகட்டாய்த் திரிவோரை விட தன்கையால் உழைத்து எளியவாழ்க்கை நடத்துவோரே மேல்.

03. மூடர் செய்வது அவர்களுக்குச் சரியெனத் தோன்றும், ஞானிகள் பிறருடைய அறிவுரைக்குச் செவி மடுப்பர்.

04. பொய்யுரைக்கும் நாவை ஆண்டவன் அருவருக்கின்றான். உண்மையில் நடக்கிறவர்களை ஆண்டவன் அரவணைக்கிறான்.

05. நீ பிறருக்குச் செய்த உதவிகளையும் மறந்து விடு. மற்றவர் உனக்குச் செய்த தீமைகளையும் மறந்து விடு.

### இல்லாதவனை எவரும் விரும்பார்

''கல்லானே ஆனாலும் கைப்பொருளொன்று உண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கு எதிர் கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்று ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல்.

- ஔவையார் -

விளக்கவுரை:-

படிப்பறிவில்லாதவனாக இருந்தாலும் அவனது கையிலே பொருளிருந்தால் யாவரும் சென்று அவனை வரவேற்று உபசரிப்பர். கல்வியறிவுள்ளவனாக இருந்தும் செல்வம் இல்லாதவனை மனைவியும் விரும்பாள். அது மட்டுமல்ல அவனைப் பெற்றெடுத்த தாயும் விரும்பாள். அவனது வாய்ச்சொல் எவராலும் ஏற்கப்படாது.

# ரிக்கி பொண்டிங் முரளிதரன் முதலிடத்தில்

ப்ரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் டெஸ்ட் துடுப்பாட்டவீரர்களுக்கான தரப்பட்டியலில் அவுஸ்திரேலிய வீரர் ரிக்கிபொண்டிங் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். இந்திய அணிக்கு எதிரான நடப்பு டெஸ்ட் தொடரில் அடுத்தடுத்து இரண்டு இரட்டை சதங்கள் அடித்தார் ரிக்கி பொண்டிங். இதன் மூலம் தரப்பட்டியலில் முதலிடம் வகித்துவந்த மே.இ.தீவுகள் அணியின் தலைவர் பிரைன் லாராவை பின்னுக்குத் தள்ளிவிட்டு, முதலிடத்தைப் பிடித்திருக்கிறார் பொண்டிங்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 908 புள்ளிகளுடன் முதலிடத்திலும், 877 புள்ளிகள் பெற்றுள்ள தென்னாப்பிரிக்க பந்து வீச்சாளர் ஷான் போலக் இரண்டாமிடத்திலும் உள்ளனர்.







### துடுப்பாட்ட வீரர்கள்.

| தரவரிசை வீரர் | நாடு | புள்ளிகள் | சராசரி |
|---|---|---|---|
| 1. ரிக்கி பொண்டிங் | அவுஸ்திரேலியா | 907 | 56.36 |
| 2. பிரைன் லாரா | மே.இ.தீவுகள் | 897 | 52.14 |
| 3. மேத்யூ ஹெய்டன் | அவுஸ்திரேலியா | 893 | 58.54 |
| 4. ராகுல் டிராவிட் | இந்தியா | 881 | 56.78 |
| 5. இன்சமாம் உல்ஹக் | பாகிஸ்தான் | 811 | 49.85 |
| 6. ஜாக்ஸ் காலிஸ் | தென்னாபிரிக்கா | 790 | 50.51 |
| 7. ஹெர்ச்லே கிப்ஸ் | தென்னாபிரிக்கா | 781 | 46.47 |
| 8. மார்க் ரிச்சர்ட்சன் | நியூசிலாந்து | 775 | 49.02 |
| 9. கேரி கிரிஸ்டன் | தென்னாபிரிக்கா | 763 | 45.47 |
| 10. ஜெயவர்த்தன | இலங்கை | 754 | 49.07 |

### பந்துவீச்சாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. முத்தையா முரளிதரன் | இலங்கை | 908 | 22.94 |
| 2. ஷான் போலக் | தென்னாபிரிக்கா | 877 | 20.83 |
| 3. சோயப் அக்தர் | பாகிஸ்தான் | 861 | 23.40 |
| 4. கிளென் மெக்ராத் | அவுஸ்திரேலியா | 806 | 21.71 |
| 5. ஜேசன் கில்லெஸ்பி | அவுஸ்திரேலியா | 748 | 24.89 |
| 6. மகாயா நிடினி | தென்னாபிரிக்கா | 745 | 28.88 |
| 7. டேரல் டஃபி | நியூசிலாந்து | 721 | 27.32 |
| 8. அனில் கும்ப்ளே | இந்தியா | 686 | 28.48 |
| 9. ஹர்பஜன்சிங் | இந்தியா | 662 | 28.47 |
| 10. ஜாக்ஸ் காலிஸ் | தென்னாபிரிக்கா | 642 | 29.54 |




# விடைபெற்றுச் சென்ற 2003ன் விளையாட்டுத்துறை நிகழ்வுகள்

ஜனவரி 5:
சென்னையில் நடைபெற்ற டாடா ஓபன்-2003, டென்னிஸ் போட்டிகளில் தாய்லாந்து வீரர் பாரடோன் ஸ்ரீசப்பான் பட்டம் வென்றார்.

ஜனவரி-6:
இங்கிலாந்தில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஜனவரி-14:
நியூசிலாந்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் இந்திய அணி 2-5 என்ற கணக்கில் இழந்தது.

ஜனவரி-25:
அவுஸ்திரேலியா ஓபன் கிராண்ட்ஸ்லாம் மகளிர் பட்டத்தை அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் வென்றார். இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் வெங்கட்ராகவனுக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பட்டது.

ஜனவரி-26:
அமெரிக்காவில் ஆண்ட்ரே அகாசி, ஆடவருக்கான அவுஸ்திரேலியா ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார். அவுஸ்திரேலிய ஓபன் கலப்பு இரட்டையர் பட்டத்தை இந்தியாவின் லியாண்டர் பயஸ் மற்றும் அமெரிக்காவின் மார்ட்டினா நவரத்திலோவா ஜோடி வென்றது.

பெப்ரவரி 9:
உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் தென்னாபிரிக்காவில் ஆரம்பம். டேவிஸ் கோப்பை ஆசியா, ஓசியானா பிரிவில் இந்தியா 4-1 என்ற கணக்கில் ஜப்பானை வீழ்த்தியது.

பெப்ரவரி 11:
ஊக்கமருந்து உட்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஷேன்வார்னே, அவுஸ்திரேலிய. கிரிக்கெட் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

பெப்ரவரி 14:
தென்னாபிரிக்காவின் சூப்பர் ஃபில்டர் ஜான்டி ரோட்ஸ் கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

பெப்ரவரி 25:
சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 500 விக்கெட்டை வீழ்த்தி உலக சாதனை புரிந்தார் பாகிஸ்தான் வீரர் வாசிம் அக்ரம்.

மார்ச் 23:
இந்திய அணி உலகக் கோப்பை பைனலில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி ஜோகனஸ் பர்க்கில் நடைபெற்ற பரபரப்பான போட்டியில் இந்திய அணியை வென்று உலக சாம்பியனாக முடிசூட்டிக் கொண்டது.

மார்ச் 27:
மோன்டே கார்லோவில் நடைபெற்ற ஆம்பர் செஸ் டோர்னமென்டில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் பட்டம் வென்றார்.

மார்ச் 28:
இங்கிலாந்தின் வேகப் பந்து வீச்சாளர் ஆண்ட்டு கேட்டிக், சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வதாக அறிவித்தார்.

ஏப்ரல் 6:
ஆசியா- ஓசியானா டேவிஸ் கோப்பை டென்னிஸ் சுற்றில் நியூசிலாந்தை தோற்கடித்து இந்தியா வெற்றி.

ஏப்ரல் 21:
டாக்காவில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டி மழையால் ரத்து. இந்தியாவும், தென்னாபிரிக்காவும் கூட்டாக வெற்றி என அறிவிப்பு.

மே 4:
ஸ்பெயின் எஃப் 1 கிராண்ட்பிரிக்ஸ் ரேசில் சூமாகெர் வெற்றி.

மே 5:
அமெரிக்காவில் நடைபெற்ற துப்பாக்கி சுடும் போட்டி ஏர் ரைஃபின் பிரிவில் தங்கம் வென்றார் இந்திய வீராங்கனை அஞ்சலி வேத்பதக்.

மே 8:
மும்பையில் நடைபெற்ற ரஞ்சி கோப்பை இறுதிப் போட்டியில் மும்பை அணி வெற்றி.

மே 13:
மே.இ.தீவுகளில் அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் வாஹ் தலைமையிலான அவுஸ்திரேலியா. அணி கைப்பற்றியது.

மே 18:
பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் வாசிம் அக்ரம் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

மே 23:
இலங்கையில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தியது நியூசிலாந்து.

(தொடரும்....)




## படுவான்கரைப் பிரதேசப் பொது நூலகங்களில் தமிழ் அலை நாளிதழ் வாசிப்பிற்கில்லை

படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பல பொது நூலகங்களில் தமிழ் அலை நாளிதழ் பொது மக்களின் வாசிப்பிற்கும் இல்லாதது குறித்து மக்கள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் பல பத்திரிகைகள் வாசிப்பதற்கிருந்தும் எமது தாயக மண்ணிலிருந்து பிரதேச செய்திகளைத் தாங்கி வருகின்ற தமிழ் பேசும் மக்களின் உணர்வலையான தமிழ்அலை நூலகங்களில் இல்லாதது எமது மண்வாசனையை சரியான முறையில் நுகர முடியாதுள்ளது.

தென்பகுதியிலிருந்து பேரினவாத அரசியலுக்கு முன்னுரிமை கொடுத்து எமது போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தும் முறையிலும் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் கவர்ச்சி சினிமாப் படங்களையும் அட்டைப்படமாகக் கொண்டு வரும் பத்திரிகைகளுக்கு முன்னுரிமை கொடுக்காது, எமது பிரதேச மைந்தனான தமிழலையினை பிரதேச அனைத்து நூலகங்களிலும் வாசிப்புக்கு வைக்குமாறு சம்மந்தப்பட்ட நூலக அதிகாரிகளைக் கேட்டு நிற்கின்றேன்.

நலன்விரும்பி

## கட்டாக்காலி மாடுகளின் உறைவிடமாகவும் மாறிவிட்ட எமது பிரதேசம்

ஆரையம்பதிப் பிரதேசத்தின் பிரதான வீதி தொடக்கம் உள்வீதி வரை வீதி விளக்குகள் இல்லாத நிலையில் இரவு ஒன்பது மணியை தாண்டினால் இருள் சூழ்ந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் வீதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையும் அதிகமாகக் காணப்படுகின்றது. இரவானால் பிரதான வீதியில் கட்டாக்காலி மாடுகள் வீதியில் உறங்குகின்றது. இதனால் பிரயாணிகளும் பொது மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதனை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சுரேஸ்கோபி, ஆரையம்பதி-02

## ஐயங்கேணிக் கிராமத்தின் அவல நிலை

மேற்படி எமது ஐயங்கேணிக் கிராமமானது ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமங்கள் அனைத்திலும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. உதாரணமாக வீதிகளை எடுத்துக் கொண்டால் கடந்த தொண்ணூறாம் ஆண்டுக்கு முன்பே போடப்பட்டு மண்ணும் மடுவுமாகக் காணப்படுகின்றது. அவசரமாக நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு வாகனங்களில் செல்ல முடியாததினால் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனை விட மின்சார வசதியோ பல வீதிகளுக்கு இல்லை. குறிப்பாக கிருஷ்னன் கோயில் வீதியில் சுமார் ஐம்பது குடும்பங்கள் வசிக்கின்றனர். பலரிடம் முறையிட்டும் மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. பணத்தைச் செலுத்தி வீடுகளுக்கல்ல வீதிகளுக்கு மின்சாரத்தைப் பெறும் துர்ப்பாக்கிய நிலமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். பல அபிவிருத்தித் திட்டங்கள் எனக் கேள்விப்பட்டாலும் எதுவுமே எமது கிராமத்திற்கு நடக்கவில்லை. சுமார் எழுநூறு குடும்பங்களுக்கு மேல் வாழும் அக்கிராமத்தில் மலசல கூடங்களோ மிகக்குறைவாக உள்ளது. ஒரு வடிகால் அமைப்பு இல்லாததால் இக்கிராமம் வருடந்தோறும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாவது வாடிக்கையாகி விட்டது. எனவே எமது கிராமத்தின் நிலைமையை கருத்திற் கொண்டு இனிமேலும் எமது கிராமத்தை ஒதுக்காமல் சம்மந்தப்பட்ட அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நிறுவனங்கள் என்பன எமது கிராமத்தின் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு ஐயங்கேணி மக்களின் சார்பில் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சி.ரவிறஞ்சித்,
பாரதிபுரம்

*அன்புடன் வாசகர்களுக்கு!*

*எமது தாயக மண்ணில் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உங்கள் பகுதிகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள், புறக்கணிப்புகள், அதிகாரிகளின் ஊழல்கள், மோசடிகள், இன்னும் எத்தனையோ சம்பவங்களை மனதிற்குள் பூட்டி வைக்க வேண்டாம்.*

*தமிழ் அலையில் வெளிக்கொணருங்கள். தமிழ் அலையில் "அலையின் தேடல்" பகுதி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற் காகக் காத்திருக்கின்றது. அதன் வாயிலாக வெளிவருவதால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.*

*எனவே உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.*

அனுப்ப வேண்டிய முகவரி
அலையின் தேடல்,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

தமிழ் அலை
Tamilalai
தினசரி




# மட். மாவட்டத்தில் பட்டாசு கொளுத்தி காயமடையவில்லை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை புதுவருடக் கொண்டாட்டங்களின் போது பட்டாசு கொழுத்தி காயமடைந்ததாக எவரும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, ஏறாவூர், வாழைச்சேனை, களுவாஞ்சிகுடி மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் செங்கலடி அரசினர் வைத்தியசாலை என்பவற்றில் இவ்வாறு சிகிச்சைக்காக எவரும் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அக்கரைப்பற்று அதிரடிப்படை புதுவருட கிறிக்கட் போட்டி

(ஜீவா)

அக்கரைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட திருக்கோயில், சாகாமம், சங்கமன்கண்டி, காஞ்சிரங்குடா, அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் அதிரடிப்படை முகாம்களுக்கிடையிலான 5 ஓவர் கொண்ட ஆறுபேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் போட்டி கடந்த 31ம் திகதி காலை திருக்கோவில் படை முகாம் முன்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் உபுல்செனிவரெத்தின கலந்து கொண்டார்.

மற்றும் திருக்கோயில் சூசையப்பர் தேவாலய பங்குத் தந்தை அருட் திரு ரஜிவன் அடிகளார் வருகை தந்திருந்தார்.

இப்போட்டியில் திருக்கோவில் படைமுகாம் முதலாமிடத்தையும் கண்ணகிபுரம் படை முகாம் இரண்டாம் இடத்தையும் பெற்றது.

# கரையோர கிராம உத்தியோகத்தர் 12வது வருடாந்தக் கூட்டம்

(ஜீவா)

அம்பாறை மாவட்ட கரையோர கிராம சேவையாளர் சங்க 12வது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 4ம் திகதி எம்.எம். அஜிவத் தலைமையில் அக்கரைப்பற்று மத்திய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் அப்துல்மஜித், கணக்காளர் ஏ.கனகரெத்தினம், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம். தௌபீக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் பதவியுயர்வு பெற்ற மற்றும் ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# தம்பிலுவில் பகுதியில் வனவிலங்கு வேட்டையாடுபவர்களை பிடிக்க முயற்சி

(உதயகுமார்)

தம்பிலுவில்லில் சட்டவிரோதமான முறையில் வனவிலங்குகளை வேட்டையாடி வந்த குழுவினரை வல இலாகா அதிகாரி கள் பிடிக்க முயன்ற போது இவர்கள் கொண்டு வந்த இறைச்சியை விட்டு தப்பியோடியதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பகல் நடந்த இச்சம்பவத்தையடுத்து விடுதலைப்புலிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அவ்வூர் பொறுப்பாளர் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு விற்பனை செய்யும் குழுவினர் மீது தாம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

# தமிழர் கூட்டணி மத்திய குழுவை கூட்டுவதற்கான தடை நீடிப்பு!

(நமது நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அனுமதியில்லாமல் மத்திய குழுவை கூட்டுவதற்கோ வேறு எந்தக் கூட்டங்களை நடத்துவதற்கோ விதிக்கப்பட்ட தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டது.

ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்திருக்கின்றது.

மனுதாரர் இத்தகைய கூட்டங்களை தலைவரின் அனுமதியுடன் மாத்திரமே நடத்த முடியும் என குறிப்பிட்டிருக்கிறார்.

மனுவில் பிரதி வாதிகளாக கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன், சிரேஸ்ட உப செயலாளர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

# சிறிலங்கா கடற்படையினரால் 24 இந்திய மீனவர்கள் கைது


(நமது நிருபர்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்ததாகக் கூறி 24 இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றில் பொலிசாரால் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களில் ஆறுபேர் தவிர ஏனைய 18 பேரையும் இன்று விடுதலை செய்யவுள்ளனர்.

இவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு இந்தியக் கடற் படையினரிடம் இன்று ஒப்படைக்கப்படவுள்ளனர்.

ஏனைய ஆறுபேரும் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.


திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திடீர் தௌபீக் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினரின் பயன்பாட்டிற்று தொலைநகல் இயந்திரம் ஒன்றினை வழங்கியுள்ளார். திருகோணமலை தகவல் திணைக்கள அலுவலகத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை (29.12.2003) மாவட்ட தகவல் அதிகாரி வீ.ஜீவானந்தம் முன்னிலையில் வைத்து சங்கத்தின் தலைவர், செயலாளர் இருவரும் இணைந்து இதனைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.(படம் எஸ்.எஸ்.குமார் திருகோணமலை)

**தொழிநுட்ப....**

இதேவேளை இரண்டாம் வருட மாணவர்களுக்கான வகுப்பு எதிர்வரும் 19ம் திகதியும் பகுதி நேர மாணவர்களுக்கான வகுப்பு பின்னர் அறிவிக்கப்படும் என அதிபர் தெரிவித்தார்.

---

**ஹக்கீம்...**

சமூகங்களிடையிலான உறவில் கீறலை ஏற்படுத்தும் எனவும் புத்திஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்று லண்டன் பி.பி.சி. வானொலி சேவைக்கு அமைச்சர் ஹக்கீம் கருத்து தெரிவிக்கையில:- வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான இடைக்கால நிர்வாக அலகு தேவை என்பதை வலியுறுத்தியிருந்தார்.

அதேசமயம் வடக்கு கிழக்கு வெளியேயும் இடைக்கால நிர்வாக அலகுகள் அமைக்கப்படுவதுடன் வடக்கு கிழக்கு அலகுக்கு கூடிய அதிகாரமும் ஏனைய அலகுகளுக்கு குறைந்த அதிகாரங்களும் வழங்க முடியும் எனும் யோசனையை தமது வரைபில் உள்ளடக்கியதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

---

**சார்க்...**

கிராம அபிவிருத்தி, தொலைத் தொடர்பாடல், போக்குவரத்து, சமூக அபிவிருத்தி, சூழல் மேம்பாடு, வனப் பாதுகாப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, மனிதவள அபிவிருத்தி ஆகிய துறைகளில் இக்குழு பங்களிப்பு செய்கின்றது. நிகழ்ச்சி நிரல் வடிவமைப்பில் ஒரு சில முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் இலங்கை வெளியுறவு அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயினும் திட்டமிடல் கூட்டத் தொடரில் இம்முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ள முடியும் என கூறியிருக்கிறார்.

வெளியுறவு அமைச்சு மட்டத்திலான நிலையியல் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இறுதிநாள் இடம்பெறும் இக்கூட்டத்தில் இந்தத் தீர்மானங்கள் எட்டப்படும்.

தெற்காசிய நாடுகளில் பரஸ்பர உறவை மேம்படுத்தும் சார்க் அமைப்பு 85ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இம்முறை இடம்பெறும் 12வது மாநாடு தெற்காசிய நாடுகளில் பரஸ்பர உறவை மேலும் மேம்படுத்தும் என்று கருதப்படுகிறது.

---

**திருமலை...**

பேரவையின் செயலாளர் எம்.ஐ.எம். முகைதீன் மற்றும் அலிசாஹிர் மௌலானா ஆகியோர் உட்பட ஒன்பது பேர் முஸ்லிம்கள் தரப்பில் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகள் இயக்கம் சார்பில் மாவட்ட தளபதி கேணல் பதுமன், அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரடங்கிய குழுவினர் பங்குபற்றினர்.

கிண்ணியா மூதூர், தோப்பூர் குச்சவெளி மற்றும் நிலாவெளி போன்ற பிரதேசங்களில் இரு தரப்பிலும் தலா இருவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. பிணக்குகள் ஏற்படும் போது இக்குழுவினர் நேரடியாகத் தலையிட்டு கட்டுப்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்- முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் முறுகல் நிலை ஏற்பட்டால் சிவில் அமைப்புக்கள் மூலம் அதனைப் பரஸ்பரம் சுமூக நிலையினைத் தோற்றுவிக்க நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது கவனித்துக் கொள்வதாகவும் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் விடுதலைப்புலிகள் உறுதியளித்துள்ளனர்.

சுமார் இரு மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பு மிகவும் திருப்தி கரமாகதாக அமைந்தது. எனினும் இங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்பட்டால் இரு சமூகங்களும் நன்மையடையுமென மௌலவி முகம்மது கரீம் கூறினார்.

இதேவேளை சிறியளவில் ஏற்படும் பிரச்சினைகளின் அடிப்படையினை ஆராயாமல் சில அரசியல் வாதிகள் ஊடகங்களுக்கு அறிக்கைகளை வெளியிடுவதனாலேயே நிலமை பாரதூரமாகதாக மாறுவதாக புலிகள் தரப்பில் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**கிராம...**

ள்ள ப.தேவராஜா ஈ.பி.குரூஸ் ஆகியோரையும், வாழைச்சேனை பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திருமதி க.பத்மராஜாவையும் பாராட்டும் நிகழ்வு இடம்பெறும்.

டெங்கு நோயிலிருந்து


டெங்கு நுளம்பு தாக்கும் நேரங்கள்

| | |
|---|---|
| காலை | 6 மணி தொடக்கம் 9 மணி வரை |
| மாலை | 3 மணி தொடக்கம் 5 மணி வரை |

விழிப்பாக இருப்போம்
ஆலோசனை
தமிழ்அலை

இப் பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 02.01.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.